பதிவு எண்: M. 6311 ★ தோற்றம்: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்

மலர்: 15] சென்னை: மாசி 1 (13—2—68) செவ்வாய் ★ வெளியூர்: மாசி 2 (14—2—68) புதன் [இதழ்: 201

மத்திய அரசுக்குத் துயரமான 'முடிவு'

கேரள முதலமைச்சர் கணிப்பு

கோழிக்கோடு, பிப். 13—

"மகாராஷ்டிரத்தில் வரும் 'மகாராஜ்' போன்றது மத்திய அரசு" என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு கூறினார்.

"மகாராஜ் தினமும் ஒரு மனிதனின் விழுங்குவார்! காங்கிரஸ் ஆதிக்கத்தில் உள்ள மத்திய பலாத்காரத்தை மாநில அரசுகளும் மற்ற கட்சிகள் அமைத்துள்ள அரசை விழுங்குவதில் அவாஜ்ஞ்சதாக இருக்கிறது! மகாராஜுக்கு நேர்ந்த 'துயரமான முடிவு' தான் மத்திய அரசுக்கும் ஏற்படும்" என்றார் அவர்!

கோவையில் வைக்கப்பட்டிருக்கும் மத்திய போலீசு

'காங்கிரசல்லாத இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் உள்நோக்கமா?'

சட்டமன்றத்தில் கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானம்

சென்னை, பிப். 13—

"கோவையில் மத்திய அரசின் போலீசுப் படை கொண்டுவந்து வைக்கப்பட்டிருப்பதன் விளைவாக ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காக சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்"

என்று இன்று சட்டமன்றக் கூட்டத்தில், இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் ஓர் அவசரத் தீர்மானம் கொண்டுவந்தார்; இத்தீர்மானம் தொடர்பாக அவர் பேசுகையில் கூறியதாவது :—

'கோவையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கும் மத்திய அரசின் போலீசுப் படையைக் கண்டு பொதுமக்களிடையேயும், அரியலூர் கட்சிகளிடையேயும், பலவித ஐயப்பாடுகளும், அச்சமும் ஏற்பட்டிருக்கின்றன.

"ஜகராயாத்தியலே நடந்த அனைத்திந்திய காங்கிரஸ மாநாட்டிலே, 'காங்கிரஸல்லாத கட்சிகளின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதன் விளைவாகத்தானே, இந்தப் படை இங்கு வைக்கப்பட்டிருக்கிறதோ' என்ற ஐயப்பாடு நிலவி நிறது.

"'காங்கிரஸல்லாத இந்த மாநில அரசைக் கவிழ்க்க — வீழ்த்த நடைபெறும் சூழ்ச்சியின் விளைவே' என்று மக்கள் மத்தியிலே பலசமயம் ஏற்பட்டுள்ளது.

"இதுபற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

"மத்திய அரசின் போலீசுப்படை அனுப்பப்படவேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசிடம் கேட்டதா? அல்லது, இந்த அரசைக் கேட்காமலே மத்திய அரசு அனுப்பிவைத்துள்ளதா என்ற விவரம் தெரியவேண்டும்."

அமைச்சர் நெடுஞ்செழியன்

இதுபற்றி அரசுசு கட்சித் தலைவரான அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பின்வருமாறு கருத்தறிவித்தார் :—

"இக்குப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு தீர்மானம் ஒன்றும் கொடுத்திருக்கிறார்; அதற்கு முதலமைச்சர் பதிலளிக்க இருக்கிறார்; அந்தப் பதிலில் இது பற்றிய விவரம் கூறப்படும்; எனவே, இதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை."

அவைத் தலைவர்

அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தமது தீர்ப்பில் கூறியதாவது :—

"இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானதுதான் — அவசியமானதுதான் — என்பதை மறுக்கமுடியாது. என்றாலும், சட்டமன்ற விதி 50—பிரிவு 10-ல் கூறப்பட்டுள்ளபடி, 'இது, தமிழக அரசின் பொறுப்பில் அடங்கியுள்ள பிரச்சினையா' என்று கவனிக்க வேண்டும். எனவே, அந்த விதிகளின்படி இத்தீர்மானத்துக்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன்."

மதுவிலக்குக்கு முழுக்கு

காங்கிரசு ஆளும் மகாராஷ்டிர மாநிலத்தில், மதுவிலக்குக்கு அறவே முழுக்குப் போட்டுவிட முடிவு செய்யப்பட்டுவிட்டதாம்.

நேற்று மகாராட்டிரச் சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை அளித்துப் பேசிய நிதி யமைச்சர் மதுவிலக்குப்பற்றி அறிவித்தாவது :—

"மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்தியும், கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் தடுக்க முடியவில்லை. எனவே, களுக்கு விடைகொடுத்திருப்பது என்றும், குறைபோதைச் சத்துள்ள மதுவை கூட விற்பதென்றும் அரசு முடிவு செய்துவிட்டது."

அண்ணாவால் முடியாதது வேறு யாரால் முடியும்?

சென்னை, பிப். 13—

"முதலமைச்சர் அண்ணா அவர்களுடன் இங்கு நான் பேசிக் கொண்டிருக்கையில், அவர் முகம் வாட்டமுடன் இருப்பதைக் கண்டேன்; நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்து அவர் வேதனையோடு பேசினார்.

"அவருக்கு உண்மையிலேயே வேதனை ஏற்பட்டிருக்கிறது; 'நாடு செல்லும் நிலையைப் பார்த்தால், இங்கே சனாநாயகம் நிலைக்குமா என்ற சினைக்கத் தோன்றுகிறது—சனாநாயகத்திற்குச் சோதனைக் காலம் ஏற்பட்டிருக்கிறது; இதிலிருந்தே லிலகிலிலாம் பேலிருக்கிறது' என்று அவர் குறிப்பிட்டார்.

"அண்ணா அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது; இந்த அளவுக்கும் அவர் வேதனையடையக் கூடாது!

"அண்ணா அவர்கள் அரிஜர்—சிந்தனையாளர்—பேச்சாளர்—ஆற்றல் மிக்கவர்; சனாநாயகத்தைச் செழிக்கச்செய்ய அவராலேயே முடியாவிட்டால் வேறு யாரால் அதனைச் செய்ய இயலும்? எவராலும் செய்ய இயலாது—அந்தக் காரியத்தைச் செய்வதற்கு அவரைத் தவிர வேறு யாரும் இலர்!

"முன்பு இராசேசுவரி மண்டபத்தில் பேசும்போது அரிஜர் அண்ணா அவர்கள், 'சனாயகத்தின் எதிர்காலத்தைப் பற்றி எனக்குக் கழப்பம் ஏதுமில்லை' என்னார்; அவ்வாறு கூறிய அவரே இன்று எவ்வளவு மன வேதனையுடன் இருக்கிறார் என்பதை நாடும் — மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும்."

—எஸ். எஸ். வாசன்

(இராஜாஜி மண்டபத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டில் பேசியது.)

ஊறு நேர்ந்தக்கால் தீர்வு காண்பேன்— விலகிச் சென்றுவிடமாட்டேன்!

"களிப்பான இந்த நிகழ்ச்சியில், நான் கவலையோடு இருப்பதாக எஸ். எஸ். வாசன் கூறினார். கல்வித் துறையில் ஈடுபாடு மிக்கவர்களுக்குத்தான் இது நன்குதக் தெரியும்.

"கவலைக்குக் காரணம், 'நாட்டுச் சூழ்நிலை' என்று அவர் சொன்னார்; அதுவே முழுக் காரணம் அல்ல—நாட்டுச் சூழ் நிலையோடு ஒத்தாரு நாட்களாக எனக்குள்ள வயிறு வலியும் காரணமாகும்.

"சட்டமன்றத்தில் 'பட்ஜெட்' தாக்கல் செய்யப்படவிருப்பதால், நோய்தீங்கு மருத்துவரிடம் மருந்தை வாங்கி அருந்திகொண்டே நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வருகிறேன். நாட்டில் நடைபெறும் நடவடிக்கைகளும், வயிற்று வலியும்தான் எனது கவலைக்குக் காரணமாகும்; 'இங்குக் கவலைக் இலலாமலிருந்திருந்தால் இந்த விழாவை பெரிய திருவிழாபோல் நடத்தியிருப்பேன்.

"சனாயகத்திற்கு ஊறு கேரிடுமோ என்ற நிலை ஏற்பட்டால், நண்பர்களின் உற்சாகத்தோடும்—உறுதியோடும் அதற்குத் தீர்வு காண்பேனேயல்லாமல், விலகிச் செல்லமாட்டேன்!"

—முதலமைச்சர் அண்ணா

குடியரசுத் தலைவர் உரை — தி. மு. க. புறக்கணிப்பு

மத்திய அரசின் சனநாயக விரோதச் செயலுக்குக் கண்டனம்

நாடாளுமன்ற தி. மு. க. செயலாளர் இரா. செழியன் அறிக்கை

புதுடில்லி, பிப். 12—

மொழிப் பிரச்சினையில் மத்திய அரசு கடைபிடித்து வரும் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், காங்கிரசல்லாத அரசுகள் தொடர்பாக சனாயகத்துக்கு விரோதமான முறையில் குறுகிய கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்துவரும் மத்திய அரசுகள் வகையிலும், இன்றைய நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றியபோது, தி. மு. கழக உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமல் விலகி இருந்தனர்.

இதுபற்றி நாடாளுமன்ற தி. மு. க. செயலாளர் இரா. செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :—

"நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம், பேராசிரியர் க. அன்பழகன் தலைமையில் கூடியது; 'இங்கி சோதித மக்களின் நியாயமான கோரிக்கை களைப் பற்றி மத்திய அரசு பிடிவாதமான போக்கைக் காட்டி வருகிறது இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், 'குடியரசுத் தலவர் பேசும்போது அவைக் கூட்டத்தில் இன்று பங்கேற்பதிலலே' என்று முடிவு செய்யப்பட்டது.

"இதுபோலவே, காங்கிரசல்லாத பல மாநில அரசுகள் விஷயத்தில் சனாயக விரோதமான வழியில் குறுகிய கட்சிக் கண்ணோட்டத்தில் மத்திய அரசு செயல்படுகிறது; இந்தப் போக்கைக் கண்டிப்பதும் கழக உறுப்பினர்கள் எடுத்த முடிவின் தொக்கமாகும்."

இரங்கல்

கூட்டத்தில் ஜனசங்கத் தலவர் தீனதயாள் உபாத்யாயாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப் பட்டது.

பிற கட்சிகள்

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலவர் பேசியபோது ச. சோ. கட்சி, இடது—வலது கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகிய கட்சிகளச் சேர்ந்த உறுப்பினர்களும், சில சுயேச்சை உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

மொழிப் பிரச்சினையில் ஜனசங்கத்திற்குள்ளேயே பிளவு

புதுடில்லி, பிப். 13—

நிர்வாகத் துறையில் முழுக முழுக்க இந்தியைப் பயன்படுத்துவதில், ஜனசங்கத்தின் நிர்வாகத்தில் உள்ள டில்லி மாகாராபின் மற்றும்—டில்லி ஆட்சி மன்றமும் (மெட்ரோபாலிடன் கவுன்சில்) கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றன.

இது தொடர்பாக ஆட்சி மன்றங்களுக்கும்—லெப்டினன்ட் கவர்னர் ஏ. என். ஜாவுக்கும் இடையே ஒருமித்த கருத்து இல்லை.

நிர்வாகத் துறையில் ஆங்கிலத்தை படிப்படியே அகற்றுவதற்குக் வகுன்சிலும், மாகராட்சியிலும் உள்ள எல்லா ஜனசங்கக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தரவில்லே.

அதற்த மாதம் கடைசி வாரத்தில் டில்லி மெட்ரோபாலிடன் கவுன்சிலில் இதுதொடர்பாக ஜனசங்கக் குழுவினர் ஆலோசிப்பார்களாம்.

மொழி விவகாரத்தில் ஜனசங்கத்தின் பெரிய தலவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள்; 'ஆங்கிலத்தை முற்றிலும் அகற்ற வேண்டும்' என்ற சிலரின் கருத்தை கட்சியின் முன்னாள் தலவர் பால ராஜ் மதோக், எம். எல். சோக்தி ஆகியோர் ஏற்கவில்லை.

உணவு முனையில் தமிழக அரசு புரிந்துவரும் மகத்தான சாதனை

உற்பத்திப் பெருக்க நடவடிக்கை--எளிய மக்களுக்கு நியாய விலையில் தானியம் இடர்ப்பாடின்றி கொள்முதல்

புதிய அரசு பொறுப்பேற்றதும் மேற்கொண்ட முயற்சிகள்--தமிழக ஆளுநர் விளக்கம்

"இதற்கு முன்பே திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியில் நாட்டம் செலுத்தாமல் இருந்ததனாலன் இன்றையப் பொருளாதார சீர்கேடுகள் அணைத்துக்கும் அடிப்படைக் காரணம் என்று இந்த அரசாங்கம் உணருகிறது. எனவே, நடப்பு ஆண்டுத் திட்டத்தில், வேளாண்மைக்கு அதிக ஆக்கம் கொடுக்க முற்பட்டுள்ளது.

"'உணவு முனையில் நமக்குள்ள இடர்ப்பாடுகளைச் சேல்வீனின் தீர்ப்பதற்குரிய ஒரே மருந்து, உற்பத்திப் பெருக்கந்தான்' என்பதை அரசு உணர்ந்திருந்தாலும், நமது மக்களில் மிக எளிய பிரிவினர்களின் இன்னல்லப் போக்குவதற்காக நியாய விலைக்களில் உணவுத் தானியங்கள் தங்குதடையின்றிக் கிடைக்கச் செய்யவேண்டியதும் முக்கியமென்றது அரசு உணர்ந்திருக்கிறது.

"உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளையில், நகரப் பகுதியினருக்கும்—நமது சமுதாயத்தின் ஏனைய எளிய பிரிவினர்களுக்கும் உணவுத் தானியங்களை தங்குதடையின்றி வழங்கப்படுவதிலும் அரசு உரிய நாட்டம் செலுத்திவந்திருக்கிறது.

"இந்த அரசு பதவியேற்புவுடன் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்று, வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கு அதிக இடர் தாரத வகையில் உணவுத் தானியக் கொள்முதலை மும்முரப்படுத்தியதுதான்.

"ஓர் எக்கருக்கும் அதற்குக் குறைந்தும் நிலம் வைத்திருக்கிற சிறு உழவர்களுக்குக் கொள்முதல் செய்வதிலிருந்து லிவக் களித்திருந்தும், 1966-ல் 7.26 இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக, 1967-ல் ஆண்டில் கொள்முதல் செய்த உணவுத் தானியங்களின் அளவு 8.5 இலட்சம் டன் அளவில் உள்ளது. இதிலிருந்து, இத்துறையில் அரசு மேற் கொண்ட முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன என்பது தெளிவாகும்"

இவ்வாறு, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், சட்ட மன்றக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினார். இத் தொடர்பில் அவர் வேளாண்மைத் துறையின் பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டார் ; தவிர தனித் தலைப்புக்களில் அவைகளின் இங்கு தரப்பட்டிருக்கின்றன :—

பருவ மழை தவறியதால் தண்ணீர்த் தட்டுப்பாடு

நடப்பு ஆண்டில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சி கள், பருவ மழை நாம் எதிர் பார்த்தவைப்போல சீராக் பெய்திருந்தால் மேலும் அதிக அளவிற்குப் பலன் கொடுத் திருக்கும்.

தென்மேற்குப் பருவமழை காலம் கடந்து பெரும்பாலும், மேட்டூரி லிருந்து குடிமை முதல் வாரத்தில் தான் பாசனத்திற்கு நீர்விட முடிந்தது ; அப்படியிருந்தும், குறுகிய காலப் பயிராகிய குறு வையும், காரும் நல்ல விளச்ச சிலத் தந்தன.

ஆனால், மேட்டூர் நீர்த்தேக்கத் தில் நீர்மட்டம் போதிய அள வில் இல்லாததால்—கிடைக் கும் நீரை மிகுந்த முன்னெச்சரிக்கை யுடன் பயிர்க்கு அளிப்பினும்—தாளடிப் பயிரின் முழுத் தேவைக்கும் நீர்விட முடியாத ஒரு நிலையை அடைந்திருக்கின் றோம்.

இயன்ற அளவிற்குத் தாளடிப் பயிரைக் காக்கவேண்டும் என்ற எண்ணத்தில், வேளாண்மைத் துறையினரிடம் உள்ள விசை ஏற்றுக் கருவிகள் பெருமளவில் செயல்படுத்தி வருகின்றோம்.

கீழ் பவானித் திட்டப் பகுதியில் மழை அளவு குறைந்ததால், வேளாண்மைப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டுள்ளது ; இங்கே இரண்டாம் பயிருக்குத் தண்ணீர்விட இயலவில்லை.

ஆயினும், செங்கற்பட்டு, வட ஆற்காடு பகுதிகளில் வேளாப் பயிர் இயல்பான விளச்சலைத் தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

நலமில்லாத இக்கூட்டத்தொடரில் தன்னில் பார்த்தானும், 1967—68-ல் மொத்த உணவுத் தானிய உற்பத்தி, கடந்த ஆண்டின் உற்பத்தியைவிட கியாயமான அளவிற்குப் பெருகும் என்று எதிர்பார்க்கிறோம்.

உரத்துக்கு டில்லி உதவி நிறுத்தியதற்கு வருத்தம்

இயல்பான திட்டங்களுக்குக் கிடைக்கும் உர வகைகளின் அளவு இன்னும் போதுமான தாய் இல்லை.

இந்தத் திட்டங்களுக்காகவும், அடுத்த ஆண்டில் மேலும் அதிக அளவில் உர வகைகள் கிட்டுவதற்கு இந்திய அரசாங் கம் வழி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

நமது மாநில உழவர்கள் இப் போது உர வகைகளைப் பயன் படுத்துவதில் மிகுந்த ஊக்கம் காட்டிவருகின்றனர்.

உர வகைகளின் பெருமதிப்பைப் பற்றி உழவர்கள் உணர்ந்து வருமபோது, உர வகை களுக்கு மத்திய அரசு கொடுத்துவந்த உதவித் தொகையை நிறுத்திமிருப் பது வருந்தத்தக்கதாகும்.

நிலத்துக்கு அடியில் உள்ள நீர்வளம்

மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டமும், உர வகைகளை அதிக மாய்ப் பயன்படுத்தும் திட்டமும், பாசன வசதிகள் நிலையாகக் கிட்டினால்தான் உரிய பலன் தர முடியும்.

பெரிய—நடுத்தர் பாசனத் திட் டங்களின்கீழ், உர வகைகளை அதிக விரிவுபடுத்தும் வாய்ப்பு குறைந திருப்பதால், நிலத்திற்கு அடியி லுள்ள நீர்வளங்களைப் பயன் படுத்தும் திட்டங்களுக்கு அர சாங்கம் முக்கியத்துவம் அளித் திருகிறது.

கினறுகள், குழாய்க் கினறு கள், வடிமூனக் குழாய்க் கினறுகள் போன்ற இவற் றைத் தோண்டுவதற் கான பெரியதோர் திட்டத்தின் வாயிலாகவும், இறைவைப் பாசனத்திற்கு மேலும் மின்சார வசதி அளிக்கும் திட்டத்தின் வாயிலாகவும் மட்டுமே வேளாண்மை உற்பத்தியைப் பெருமளவில் உயர்த்த முடியும்.

சிறப்பு உதவியளிக்க டில்லி மறுப்பு

திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறைந்த நிதி வசதிகளுக்குள் இத்தகைய வேலைத் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவது இயலாதென்பதை உணர்ந்து, ரூ. 20 கோடி அளவிற்குச் சிறப்பு உதவி அளிக்குமாறு இந்திய அரசிற்கு எழுதினோம்.

சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடுகளாகச் செலவிடுதற்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிப்பதை யும், பணவீக்கம் ஏற்படாதி என் பதை உணர்ந்திருக்க வேண்டியிருப்பினும், இந்திய அரசு நமது வேண்டுகோளை ஏளனக்கூட ஏற்கவில்லை என்பது மருந்தற்கதாகும்.

ஊராட்சி ஒன்றியங்கள்--தோழில்கள் நிதியிலிருந்து உழவுக் கருவிகள்

ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் உபரி நிதியைக் கொண்டு டிராக்டர்கள், ஏனைய வேளாண் மைக் கருவிகள் இவற்றை வாங்கி உழவர்களுக்கு எளிய வாடகை வீதங்களில் கொடுக் கப் பயன்படுத்திக் கொள்ளலா மென்று அரசாங்கம் ஏற்கனவே அவைகளுக்கு அனுமதி வழங்கி யுள்ளது.

இந்தத் திட்டங்களுக்காக அர சாங்கம் செய்துள்ள வசதிகளை இது பெருக்குவதோடு, நலிவ வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்தும் வசதிகளை உழ வர்களின் வீட்டு வாயிற்படி யிலேயே ஏற்படுத்திக் கொடுக் கவும் வகை செய்துள்ளது.

பற்பல கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் கினறு கள் தோண்டுதல், விலையேற் றங்களே நிறுவுதல் போன்ற நிலையான மேம்பாடுகளைச் செய் வதற்கு, அக்கோயில்களின் உபரி நிதிகளை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றியும் அரசு இப்போது ஆய்வு செய்து வருகிறது.

இத்தகைய மேம்பாடுகள் சமுதா யத்திற்குப் பெரிதும் தேவைப் படுமென்பதை உறுதிசெய்யப் பெருகுவதற்கு வகை செய்ய தேடு, அக்கோயில்களின் வரு வாயை மேலும் உயர்த்துவதற் கும் உதவியாயிருக்கும்.

உற்பத்தியில் தொழிலாளர்க்கு நியாயமான பங்கு

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முன்னையில், உற்பத் தித் தொழிலில் ஈடுபடும் அனை வரும் உற்பத்திப் பெருக்கத்தின் பலன்களை நியாயமான அளவில் பகிர்ந்துகொள்வதற்குத் தேவை யான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, பயிரிடும் குத்தகைக் காரர்களின் வளர்ச்சி போது மான அளவிற்குப் பாதுகாக்கப் படுகின்றனவா என்பதை அறி வதில் நாம் காட்டம் செலுத்த வேண்டும்.

குத்தகை உரிமைகளைக் குறித்து சட்டபூர்வமான ஆவணம் ஒன்றை வகைசெய்து தரு வதற்கான சட்டம் இயற்ற வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது; இது குறித்த சட்ட வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது ; அது, விரைவில் சட்டப் பேரவை முன் வைக்கப்படும்.

காவுகள் கருதியுள்ள குத்தகை உரிமை ஆவணம் குத்தகைக் காரர்களின் குத்தகைக் கால அளவை உறுதிபெடுத்துவ துடன், நிலச் சீர்திருத்த ஏற்பாடு கன்கீழ் நிலம்பட்சசெல்லுத்த தக்க உதவும். உழவர்கள் எனிய நிபந்தனைகளில் கடன் பெறவும் இது வகைசெய்யும்.

25 சதவிகிதத்தினர் பேசும் இந்தி நாட்டின் ஆட்சிமொழியாவதா?

மொழிப் பிரச்சினையை அடுத்த தலைமுறையினர் தீர்த்துக்கொள்ளட்டும்

'இதைவிட அவசரமான பிரச்சினைகளில் கவனஞ் செலுத்துக'--இந்திய அரசுக்கு முன்னாள் தலைமை நீதிபதி அறிவுரை

குண்டூர், பிப். 12—

"அரசியல்--பொருளாதார--சமுதாயத் துறைகளில் மிகவும் நெருக்கடியான கட்டத்தைக் கடந்துகொண் டிருக்கும் இந்தியாவில், நாட்டின் ஒருமைப்பாட்டில் அக்கறை காட்டும் வகையில், மொழிப் பிரச்சினையைத் தள்ளிப்போட வேண்டும் ; அடுத்த தலைமுறையினர் இதில் தீர்வு காணும்படி விட்டுவிட வேண்டும்; மொழிப் பிரச்சினையைவிட அவசரமும் அவசியமுமான வேறு பிரச்சினைகளில் இந்திய அரசு முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்"

என்று முன்னாள் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே. சுப்பாராவ், இங்கு சுழற்குமுக் கூட்டத்தில் பேசுகையில் வற்புறுத் தினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அரசியல் சட்டத்தில் மொழிப் பிரச்சினை பற்றிச் சொல்லப்பட்டி ருப்பதையெல்லாம் குறிப்பிட்டு விட்டு 'அரசியல் சட்டத்தில் எந்த இடத்திலும் இந்தி ஆட்சி மொழி யாக அறிவிக்கப்படவில்லை' என்று கூறினர்.

தனித்தனி மொழித் தொகுதியி னரிடையே இந்தி மொழி பேசும் தொகுதியினர் அதிக எண்ணிக் கையினராக இருந்தபோதிலும், நாட்டின் 35 சதவிகித மக்களே இந்தியைப் பேசுகிறார்கள் என்றும் இந்தியத் தலைமை நீதிமன்றத்திற் கும் மாநில நீதிமன்றங்களும் பொதுவான மொழி இல்லாமல் மிகவும் சங்கடமான நிலை ஏற்பட மென்றும் சச்சரவுக்கை செய்தார்.

"வட நாட்டிலுள்ளவர்களுக்குத் தாய்மொழியாக உள்ள இந்தி தென்னாட்டவருக்குத் தாய் மொழியாகாது ; எனவே, இந் தியைத் தென்னாட்டில் நிணிப் பதால் வடநாட்டவருக்கும்— தென்னாட்டவருக்கு மிடையே சமவாய்ப்பின்றி தென்னாட் டவருக்குச் சுமை அதிகரிக்கும்"

என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு சீர்குலையும் நிலை உருவாகியிருக்கிறது

ஆளுநர் எச்சரிக்கை

ஜெய்ப்பூர், பிப். 11—

"அறிவுச் செல்வதுதை எந்த மொழியின்மூலம் பெறுவது என்ற தகராறினால் நாட்டுச் சீர் குலையும் அபாயம் ஏற்பட் டிருக்கிறது"

என்று, இராஜஸ்தான் கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் கூறியள்ளார் ; அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"இங்கு நேரத்தில் மிகக் கடுமை யாக இருப்பது மொழிப் பிரச் சினைதான் ; மொழியை, அறி வுச் செல்வத்தைத் தேடுவதற் கான சாதனமாகப் பயன்

படுத்திக் கொள்ளவேண்டும் ; ஆனால் இப்போது அது அம் முயற்சிக்கு ஓர் இடையூறு ஆகிவிட்டிருக்கிறது ; இது ஒரு முக்கிய சோக்கேடு பாதிக்கப்படுகிறது ; நாடு முழுவதினும் கல்வியின் தரம் குறைந்துவருகிறது; இதற்குக் காரணம், 'அறிவு வளர்ச்சி' என்ற பொதுவான இலட்சி யத்துக்காக எந்தச் சாதனத் தைப் பிரயோகிக்கலாம் என்பதில் வட இந்தியாவுக்கும் — தென் னிந்தியாவுக்கும் இடையில் உள்ள வேறுபாடே ஆகும்."

தென்னகத்துக்கு பெருமை சேர்க்கும் நிறுவனங்கள்

இந்திய உலக வணிகத் தொழில் கண்காட்சியில் சில அரங்குகள்

தென்னகம்—குறிப்பாகத் தமி ழகமும் கருநாடகமும் பொறியில் நுன்னணியில் உலகாகுகோடு போட்டியிடும் அளவில் உள்ள சிறப்பை இந்திய உலக வணிகத் தொழில் கண்காட்சியில் உள்ள எல். ஐ. பாலவிருஷ்ணன் அண்டு பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் ; இன்டர்நேஷ னல் இஞ்னீயரிங்கோட்ஸ் பிரை வேட் லிமிடெட், பெங்களூர் ஆகிய நிறுவனங்களின் அரங்கங்கள் தெளிவுபடுத்தின்றன.

மனித உடலின் பல்வேறு இய ங்களோடு அளந்து அமிந்த ஆயும் மருத்துவர்களோடும் இந்த நிறு வனங்கள், உந்துகள்—பேருந்து கள்—வாடகைக் கார்கள் போன்ற தானியங்களின் பல்வேறு இய க்க நுணுக்கங்களோடு அப்ப டியாய் பயன்படும் பல கருவிகளத் தயாரிக்கின்றன.

தமிழகத்தின் மிகப் பெரிய தொழிற்சாலை நகரான சேலம் புதிதாகில் இத்தகைய சில நிறு வனங்கள் இருப்பதும் அவற்றைத் தமிழர் முனனினறு இயக்குவதும் பாராட்டத்தக்கனை. இன்டஸ் ட்ரியல் கேபுவல் இன்ட்ருமென்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், பெங்க ளூரில் உள்ள நிறுவனம் ஆகும்.

24 மணி நேரத்தில் தானியங்கி செல்லும் பாதையின் தரம்—தன்மை—ட்டியின் சுறுசுறுப்பு—மக்த நிலைகள்—ட்டுங்களை அவர் செயல்படும் முறை—இவற்றை யெல்லாம் பதிவுசெய்யும் 'Tacho-graph' என்ற கருவி, மிக நுணுக்க மான ஒன்று இங்கிய தமிழ் கண்டத்திலேயே இங்த ஒரு நிறு வனத்தான் அதைச் செய்வதாகச் சொல்கிறார்கள்.

உத்தரப் பிரதேச அரசினர் போக்குவரத்து—பம்பாய் போக்கு வரத்து—தனியார் பேருந்துகள் ஆகியவற்றில் இந்தக் கருவியைப் பொருத்தியதன் விளைவாய் 42,000 மைல்களை மட்டுமே ஓடிய டயர்கள் இப்போது 80,000 மைல்கள் செல் கின்றனவாம். இது பெருமிதத்தோடு

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தி பேசாத மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் பரிசீலிக்க வேண்டும்'

மொழிப் பிரச்சினை குறித்து ஆந்திரத் தலைவர்கள் கோரிக்கை

ஐதராபாத், பிப். 12—"நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட ஆட்சி மொழிச் சட்டம்—அதனுடன் நிறை வேறிய நிர்ணய ஆயிலை உள்ளிட்ட மொழிப் பிரச்சினை, இந்தி பேசாத மாநிலங்களின் அரசியல் கட்சித் தலைவர்களால் மறு ஆய்வு செய்யப் படவேண்டும்"

என்று, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஆறு அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

மொழிப் பிரச்சினை குறித்து தென்னேட்டி விசுவநாதம் எம்.பி., டி. நாகிரெட்டி எம்.எல் ஏ. (இடது கம்யூனிஸ்டு), கே. இராமகாதன் எம்.எல்.ஏ., வி. பி. இராகவாச்சாரி எம்.எல்.சி., சி. வி. கே. ராவ் எம்.எல்.ஏ., டி. கோவிந்தராசலு எம்.எல்.சி. ஆகியோர் கூடி விவாதித்தனர்.

பிப். 20-ம் நாள், ஐதராபாதில் எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் கூட்டி விவாதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

எதிர்க் கட்சித் தலைவர்களைக் கூட்டுகிறார் முதலமைச்சர்

ஐதராபாத், ஞா. 11—மொழிச் சிக்கல் குறித்து விவாதிக்கும் பொருட்டு, எதிர்க் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்றைக் கூட்டவிருப்பதாக, ஆந்திரச் சட்ட மன்றக் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டியார் அறிவித்தார்.

சட்டமன்றத்தில் எந்த முறையில் விவாதம் அமைய வேண்டும் என்பதற்கான அடிப்படையில் அவர் இந்தக் கூட்டத்தில் விவாதிப்பார் என்று தெரிகிறது.

மாணவர்கள் நடத்தும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிபற்றி அவர் குறிப்பிடுகையில், 'சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர்கள், மாணவர்களிடையே அரசின் மொழிக் கொள்கையை விளக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

"மற்ற மாநிலங்கள் மும் மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லையானால் பிரச்சினை கடுமையானதாகிவிடும்" என்றும் அவர் கூறினார்.

'நம் நாடு' வளர்ச்சிக்கு நன்கொடை

பம்பாய்—சோகேசுவரி பி. ஏ. பிச்சமணி குழுமினரின் 7-வது நிலம்பக் கல்வி அர்க்கேற்றத்தின் போது பங்கேற்புப் பேசிய நாராவி தி. மு. க. செயலாளர் த. மு. பொற்சோ அவர்களுக்கு ஆர். கே. அவர்களால் அன்பளிக் கப்பட்ட முட்டையை ஏலம் விட்ட நிதி, தெ. ஆ. மாவட்டம் சங்கராபுரம் வி. நாராயணசாமி ரூ. 11-க்கு ஏலம் எடுத்தார்; இத்தொகை 'நம் நாடு' வளர்ச்சி நிதிக்குக் கொடுக்கப்பட்டதை நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

—பொறுப்பாளர்

மதுராந்தகத்தில் அண்ணா உருவச் சிலை

வட்ட தி. மு. க. முடிவு

மதுராந்தகம் வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் மதுராந்தகம் நகர தி. மு. க. பணிமனையில் 3—2—68 அன்று நடைபெற்றது; அதுபோது, வட்டக் கழகத்தின் சார்பில் அண்ணா அவர்களின் உருவச் சிலையை மதுராந்தகம் நகரில் அமைப்பது எனவும், வட்டக் கழகத்தின் சார்பில் நாடகமன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு அவர்களுக்கு ஜிப் கார் ஒன்று வாங்கித் தருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்துவதற்கு 11-பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள். அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப் பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் தாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவை யெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப்பொருட்களுக்கு தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளித்துவருகின்றனர். பொருட்களிலுள்ளான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிய' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியர் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கிறது.

MB
மெட்டல் பாக்ஸ்
பாதுகாப்பான பாக்கிங்

IWTMB 4108

நடக்க இருப்பவை

14--2--68

கோவை

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு பீளமேடு சகசிவன்ராம் திடலில்: பேசுவோர்: வெ. கண்ணன், ஏ.எள். சாமி, சே.அ. இராசமாணிக்கம் எம்.சி., இரா. மோகன், மற்றும் பலர்.

அம்பத்தூரில் திருமண மண்டபத் திறப்பு விழா

அம்பத்தூரில் கழகத் தோழர் சி. திருவேங்கடம் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள திருமண மண்டபத்தை, அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் திறந்துவைப்பார்; இத்தத் திறப்புவிழா 14—2—68 மாலை 6-மணிக்கு தோழர் சா. கணேசன் எம்.எ. தலைமையில் நடைபெறும்; திருவள்ளுவர் படத்தை திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்களும், கலிவாணர் படத்தை திருமதி என். எஸ். கே. மதுரம் அவர்களும், காந்தியார் படத்தை 'மாலை மணி' ஆசிரியர் பி. எஸ். இளங்கோ அவர்களும் திறந்து வைப்பார்கள்; முன்னாள் மேயர் அ. பொ. அரசு எம்.எல்.ஏ., எம். கோபால் எம்.எல்.ஏ., மா. செங்குட்டுவன், திருவாளர்கள் எஸ். கே. பாலசுப்பிரமணியம், டி. ஆர். குணசேகரன், எஸ்.விவேகானந்த, க. துரை, திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் எம்.எல்.ஏ, மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

தென்னகத்துக்குப் பெருமை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார், பெங்களூர் நிறுவனத்தின் விற்பனைப் பொறுப்பாளர் திரு. என். சுதாகர் அவர்கள்.

சைக்கிளில் பொருத்தக்கூடிய ஒரு வேகமானியையும் இவர்கள் தயாரிக்க இருப்பதாகச் சொல்லப் பட்டது. எனியவரும் வாங்கத்தக்க தாக இரு. 40 வீலையில் அமைய விருக்கும் இந்தக் கருவி, சைக்கிளின் வேகம்—கடந்துவந்த நேரம் —கடந்த தொலைவு ஆகியவற்றைக் காட்டுவதாக உள்ளது.

ஜெர்மன் நாட்டு நிறுவனமான பெல்டோ மெஷின் ஃபேக்ரிக் கம் பெனியுடன் இவர்கள் கொண்டுள்ள ஒத்துழைப்பின் பலனுக்தி தயாரித்திருக்கும் சில கருவிகள், நம்முடைய நாட்டுப்புறங்களில் பணிசெய்யும் மரத் தச்சருக்குப் பெரிதும் பயனடைத்தக்கவை யாகும். மரம் அறுத்தல்—துண்டு போடல்—துளை செய்தல்—மேற் புறத்தை வழவழப்பாக்குதல் போன்ற பணிகள் மிகக் குறுகிய கால நேரத்தில் செய்து முடிக்கும் இக்கருவிகள், தொழிலாளர் மத்தியில் புழக்கத்துக்கு வருவது நல்லது. இக்கருவிகளின் விலையும் குறைவாகவே உள்ளது.

1984-ம் ஆண்டில் நிகழ்ந்த 63,168 சாலை விபத்துக்களில், 7,197 விபத்துக்கள் உயிர்ப் பலி கொண்டவையாய் அமைந்தன உன்னதங்களும், பிற தானியங்களும் விரைந்து சாலைகளில் புழங்கத் தொடங்கிவிட்ட இந்நாட்களில், எல். ஜி. பாலகிருஷ்ணன் பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கோவை; இண்டர்நேஷனல் இன் ஸ்ட்ரு மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர் போன்ற நிறுவனங்கள் செய்து அளிக்கும் நலுக்க மான கருவிகளை அவற் றில் பொருத்துவதன் மூலம், விபத்துக்கள் குறைந்திட வழி ஏற்படும்; போக்குவரத்துத்துறை போன்ற வற்றின் செலவும் கணிசமான அளவு குறையும்.

சு. கஸ்தூரி நிகழ்ச்சிகள்

பிப். 17: குடியேற்றம்; 18: கெய்லேஸ்; 25: பேட்டர் அண்ட். மார்ச் 2, 3: பெங்களூர்; 6: ரசோரெடி

இரவிட. ருன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.எல்., அவர்கள் ஆற்றிவரைகளும், கலைவிருந்து நிகழ்வும், அச்சிவைரவாகவும் கொண்டு, அழகிய அச்சுத்தில் (24, ருவிஜராஜா ஸன செட்டித் தெரு, சென்னை-1) அச்சிடு செலவிலிருக்கிறது.

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

புதுடில்லியில் கேள்விக் குறியினைக் கொடுத்திருக்கும் தமிழகக் கவனரின் பேருரைக்கு கனறி தெரிவிக்கும் விமாக, கழக உறப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

இனி வரவிருக்கும் அன்ருட நடவடிக்கைகள் நன்கு அமைவதற்கான அடிப்படை, தோழர் ஆசைத் தம்பி அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆளுநர்களின் சாதனைள்—அவைகளின் சாதனமனம்பொருத 'ஆண்டவர்'களின் வேதனை—இரண்டினாலும் எடுத்துக்காட்டியுள்ளார் அவர்!

கழக அரசின் கடந்த ஓராண்டுச் சாதனைகள் அவரால் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டிருப்பது, வள்ளுவ உலரகு முத்தாய்ப்பாக விளங்குகிறது.

★ இருபோக வினைச்சலினுல் உணவு உற் பத்தியினைப் பெருக்கியது—

★ எதுப் பற்ருக்குறையைப் போக்கி அன் லிங்கோக முறையைச் சீராக்கியது—

★ கோவைப் பஞ்சாலே நிலேமைகளே சுமுக மாக்கியது—

★ பல இடங்களுக்கிடையில், களவாக இருந்த படி அரிசித் திட்டத்தை நனவாக் கியது—

★ மொழிப் பிரச்சினேயில், சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தது—

என்ற ஆசைத்தம்பியின் பட்டியல விளக்கத் தினைக் காங்கிரசு முதலிபோர்கள், தாங்கள் பேச எழுவதற்குமுன் ஒருமுறை நினேவில்கொண்டு, பின்னரே உரையாற்ற வேண்டும்.

ஆனுல், 'முன்னே ஆளும் கட்சியினரான அவர் களோ—ஆசைத்தம்பி கூறியுள்ளவாறு—இன்ன மும் தாங்கள், 'ஆளும் கட்சி'யினராக இருப்ப தாகத்தான் நினைக்கிறர்கள்! 'எதிர்க் கட்சியாக இருக்கிறேம்' என்ற நினப்பே அவர்களுக்கு எரிச்சலைக் கொடுக்கிறது! அந்த எரிச்சலின் வினவாகத்தான், எதிரெதிராக கருத்துக்களுக்கு ஒரே சொந்தக்காரர்களாகத் தங்களே மாற்றிக் கொண்டுவருகிறர்கள்!

> "படி அரிசித் திட்டத்தில் ஏன் பணத்தை வீணடிக்கிறீர்கள்?" என்ற கேள்வி ஒரு சமயம்!
>
> "எங்கள் தொகுதிக்கு மட்டும் ஏன் படி அரிசித் திட்டம் இல்லே என்ற கேள்வி மற் ருரு சமயம்!
>
> "என்ன — இப்படிக் கலவரங்கள்—எங்கு பார்த்தாலும்" என்ற விசனம் ஓர் இடத்தில்!
>
> அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தாரோ, 'ஐயோ! அடக்குமுறை பார்த்தீரா!' என்ற அங்கலாய்ப்பு மற்ருரு இடத்தில்!

காங்கிரசுக்காரர்களின் இந்த இரட்டைப் போக் கினே, ஆசைத்தம்பியின் உரை நடுவே குறுக் கிட்டு, மொராஸ்ஜியின் தமிழகப் பயணம் ரத்தா னது பற்றி விளக்கமளித்துள்ள அண்ணு அவர் கள் எடுத்துக்காட்டியுள்ளார்—

> "கலவரங்களேத் தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் நியாயம்தான் என்று உணருக மனப்பான்மை, இங்குள்ள காங்கிரசுக்காரர்களுக்கு இல்லே; எங் களுக்கு எதிராக அதைப் பயன்படுத்த வாரகள்"

என்று முதலமைச்சர் சொல்லியிருப்பது, தமிழ கத்து எதிர்க் கட்சிவரிசையிற்பிறிய ஒரு அரிய படப்பிடிப்பு! காங்கிரசுக்காரர்கள் ஏன் நிரட் டைப் போக்கினரர் இருக்கிறர்கள் என்பதை அரசியல் ரூட்சமத்தைக் காட்டும் கருத்து விளக்கம்.

★ கடந்த ஓராண்டுக் காலத்தில் மற்ற எந்த மாநில அரசுகளும் சாதித்தவைகளினிட் தமிழகத்தில் கழக நிர்வாகம் ஆற்றியுள்ள புதிய பனிகள் ஏராளம்—

★ அதன் விளவாக, அதன் ஆட்சி தமிழக அரியெலி வேர்விட்டுப் பிடிப்பு ஏற்பட்டிருக் கிறது—

★ எனவே, இன்னும் நான்காண்டுகளுக்கு—அதாவது அடுத்த பொதுத் தேர்தல் வரும் வரை காத்திருப்பதனிலிட, காங்கிரசுக்கு எந்த ஒரு மார்க்கமும் இல்லே—

என்று ஆசைத்தம்பி அவர்கள், அழுத்தந்திருத்த மாக எடுத்துரைத்திருப்பதினைக் கண்ட பின்னரா வது தமிழகத்துக் காங்கிரசுக்காரர்கள், 'சிறந்த எதிர்க் கட்சியினராகப் பணியாற்றுவார்களா' என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

'படி அரிசித் திட்டம், ஏன் கசர்ப்புறுக்களுக்கு மட் டும்' என்பதற்கான விளக்கம், ஏற்கனவே பல முறை—பலவேறு தரப்புகளில் விளக்கப்பட்டிருக் கிறது.

அது மட்டுமல்ல; அளவுப் பங்கீடு (ரேஷன்) முறை, காங்கிரசு ஆண்டபோதும் ஈகசர்ப்புறு களுக்குத்தான் இருந்தது—கிராமப்புறங்களுக்கு இல்லே.

இந்த இரண்டினேயும் உணராமல், 'படி அரிசித் திட்டத்தினே முதலில் கிராமப்புறங்களிலிருந்து தான் துவங்கவேண்டும்' என்று காங்கிரசு உறுப் பினர் ஜார்ஜ் பேசியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது!

> 'வாங்கி சாப்பிடும் மக்கள் நகர்ப்புறங்களில் தான் அதிகம்' என்ற புள்ளிவிவரத்தினே அவர் இனியாவது உணர்ந்துகொள்வது நல்லது!

'தமிழகத்தில் எதிர்க் கட்சியினராக இருக்கிறேம்' என்பதனைக் காங்கிரசுக்காரர்கள் எப்படியும் பல நேரங்களில் மறந்துவிடுகிறர்களோ—அப்படியே, 'அவகேடு—புதுடில்லியில் ஆளுவது நமது கட்சி தான்' என்ற நினவியும் பல நேரங்களில் இழந்துவிடுகின்றனர்!

'கன்னியாகுமரிக்குப் புதிய இரயில் மார்க்கங்கள் வேண்டும்' எனக் கேட்ட காங்கிரசு உறுப்பினர் ஜார்ஜுக்கு, இந்த மாலேயத்தில் ஏற்கனவே இருந்துவரும் சில இரயில் மார்க்கங்களே ரத்து செய்ய முயலும் மத்திய அரசின் போக்கினே முத லமைச்சர் அண்ணு அவர்கள் நினவூட்டியிருக் கிறர்!

இதுபோல் பலதடவைகளில், இக்கட்டான நிலேமை களுக்கு இங்குள்ள காங்கிரசுக்காரர்கள் ஆளாகி தம் நீரவேண்டியிருக்கிறது; காரணம், 'தமிழகத்துக் காங்கிரசுக்காரர்'களாகதடந்துகொண்டால், புதுடில்லிக்குக் கோபம் வருகிறது! சரி—அவர் கன்தம் திருப்திப்படுத்தலம் என்றும், இங்கே அர சியல் நடத்துவது கடினமாக இருக்கிறது!

> "தைபிமழந்தால், தமிழ்நாடு காங்ரேசுக் கமிட்டியைக் கூட்டி, மொழித் நிர்மானத்தை ரத்து செய்யும்படி நிர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புங்கள்"

என்று ஆசைத்தம்பி அவர்ன், சட்டமன்றத்தில் எழுப்பியுள்ள சவாலுக்குக் காங்கிரசுக்காரர்கள் —மன்றத்தில் இல்லேயென்றலும் வெளியிலாவது பதில் தருவார்களா என்பதனை அனேவரும் எதிர்பார்ப்பதில் தவறு இருக்கமுடியாது!

விசாரணை செய்வதற்குத் தயங்காட்டோம்!

மாநாட்டிற்காக நிதி வசூலிக்கப் பட்டதில், 'நிர்பந்தம் இருந்தது' என்று இங்கு கூறப்பட்டது. இத்தகைய நிர்பந்தம் எங்கேந்த முறையில்—எப்படிப் பட்ட வகையில் இருந்தது என் பதற்கான விவரங்கள் எல்லாம் கூறப்படுமானுல், அதுபற்றி விசாரிக்க நாங்கள் தயங்க வில்லே.

அதிகாரிகளிடையே 20 ஆண்டு காலமாக கழப்புடுவிட்ட பழக் கம் காரணமாகச் சில இடங் களில் இந்த நிலே ஏற்பட்டிருக்க லாம்; சிலர் இனனும் பழக்கத் திலிருந்து விடுபடவில்லே.

ஆனுல், முளபிருந்த நிலேமைனே எல்லாம் நாங்கள் வந்த பிறகு படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருகிறோம்; இனியும் குறைத்துக் காட்டுவோம் என் பதை மட்டும் அவர்கள் உணர வேண்டும்.

'இன்ன லாரி வந்தால் ரு. 800 வருவித்துக் கொண்டுவிடு; இல்லாவிட்டால் விடாதே' என்று நாங்களா உத்தரவு போடுகிறோம்?

இதுபற்றி விசாரிக்கத் தயாராயிருக்கிறோம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

இன்னுன்றையும் குறிப்பிட விரும்புகிறோம். இந்த மாதிரி நிர்பந்தம் இருக்கிறது என் பதை அறிந்த பின்னர், உறுப் பினர் அவர்கள் அதிகாரிகளே அணுகித் தடுத்திருக்கலாம்; அலலது, உலகத் தமிழ் மாநாட் டை வரவேற்கும் உறுப்பினர் அதற்கு நிதி வருலிபடற்கு அதிகாரிகளுடன் ஒத்துழைத் திருக்கலாம்.....

ஜார்ஜ்:—"அதிகாரிகளுன் ஒத் துழைத்திருக்கலாம்" என்ரு முதலமைச்சர் சுறுகிறர்; அவர் கள் அழைத்திருந்தால் செய் திருக்கலாம்."

ஸ்ண்ணு:—"'அழைத்துக் கேட் டிருந்தால் செய்திருக்கலாம்' என்று மதிப்புக்குரிய உறுப்பி னர் கூறுகிறர்: ஆனுல் நாங் கள் அழைத்துக் கேட்ட பிறகு 'என்ன நடந்தது' என்பதை— இங்கே இந்தப் பிரச்சினே வந்த தால்—குறிப்பிடவேண்டி யிருக் கிறது.

கம்பருக்குச் சிலே எழுப்ப நிதி திரட்டித் தருவதாக மதிப்புக் குரிய எதிர்க் கட்சித் தலேவர் கருத்திருமன் அவர்களே கூறி னர்; ஆனுல், அவர் நிதி வசூ லித்துத் தராமல், கோவை கலெக்டர் திரட்டிய நிதியி லிருந்து வாங்கினர்—அந்த கிதியை மாநாட்டுக் குழுவிற்கு அனுப்பி வைத்தார்; எங்களிடம் கேட் டால், 'என்ன நடக்கிறது' என் பதை விளக்க நான் இதைக் குறிப்பிடவேண்டிய அவசியம் ஏறபட்டது.

மேலும், 'மாநாட்டின் கணக்கு இந்த மன்றத்தில் வைக்கப் படுமா?' என்று கேட்கப்பட்டி ருக்கிறது; தமிழக அரசே இதை ஏற்று நடத்தாத காரணத்தால், மாநாட்டின் கணக்கு கள்ச் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படச் சட்டமன்ற விதி கள் இடம் தருகின்றனவா என் பதுபற்றி இனனும் பரிசீலன செய்யப்பட வேண்டியிருக் கிறது; ஆயினும், மாநாட்டின் கணக்குகள் விரைவில் வெளி யிடப்படும்.

வெளியிடப்படுவது மாத்திரமல்ல; கணக்குகளே அதிகாரபூர்வ மாகத் தணிக்கை செய்யும் பணி இப்போது நடைபெற்று வருகிறது; தணிக்கை செய்யப் பட்ட அறிக்கையுடன் கணக்கு கள் வெளியிடப்படும்.

அப்படி வெளியிடப்படும்போது, இதுபற்றி இப்போது கூறப் படும் புகார்கள், வெறும் கற் பனேயா இ—காற்று இ— வெறும் கூற்றுப்போல் தைப் பார்ப்போம்!"

காங்கிரசார் 'கற்பனை'க் குற்றச்சாட்டு--காற்றுகி--வெறுங் கூற்றுகிப் போகும்!

தணிக்கையில் இருக்கிறது தமிழ் மாநாட்டுக் கணக்கு--சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணு அறிவிப்பு

சென்னே, பிப். 12—

சட்டமன்றத்தில் கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத் தின்போது பேசுகையில் காங்கிரசு உறுப்பினர் ஜார்ஜ், 'உலகத் தமிழ் மாநாட்டின் கணக்குகள் இந்த மன்றத்தில் வைக்கப்படுமா?' என்று கேட்டார்; 'அம்மாநாட்டிற்காக நிதி வசூலிப்பதில் நிர்பந்தம் இருந்தது' என்றும் புகார் செய்தார்; இதுபற்றி முதலைச்சர் அண்ணு அவர்கள் கூறுவையில் தெரிவித்ததாவது :—

உலகத் தமிழ் மாநாடு நடத்தப் பட்ட விதம் குறித்தும் பலவித மாகக் கூறப்படுவதால், அது பற்றி விளக்கமளிக்க விரும்பு கிறேன். உலகத் தமிழ் மாநாட் டைத் தமிழக அரசு மட்டும் நடத்தவில்லே; 'உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்' என்ற ஒன்று இயங்கிவருகிறது; அது தான் முதலாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்குவதற்குக் காரணமாக இருந்தது.

கோவாலப்பூரில் சென்ற ஆண் டில் இந்த மாநாடு நடைபெற் றது; முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலம் அம்மாநாட்டிற்கு சென்றபோது அடுத்த மாநாட் டை இங்கு நடத்தலாமென அழைத்தார்; அதனடிப் அதற் காக நிறுவப்பட்ட குழு, மா நாட்டை நடத்தியது—அதற்கு ஆதரவாக தமிழக அரசு உறு துணையாக இருந்து பணியாற்றி யது.

இதனுல் ஏற்படும் நல்லது—கெட் டதற்கு அரசாங்கமே பொறுப்பு என்று கூறப்பட்டாலும், குறை களேக் கூறினுலும், ஒன்றை நினே வில் கொள்ள வேண்டும்; இரண்டும் இனிங்கு கடந்திய மாநாடு இது—தனிப்பட்ட முறையில் அரசாங்கமே ஏற்று நடத்தியது அல்ல!